உதய தீபம்

அருளியவர் :

உபாசனை குலபதி

ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீதுர்க்கைச் சித்தர்

இதற்குரிய நண்பர்கள் :

N. ஜெயமூர்த்தி
S. இராதாகிருஷ்ணன்
S. அன்பு

முதற் பதிப்பு 3000
ஸ்ரீ ஜெய துர்க்கா பீடம்
8, நல்லதம்பி நெடுஞ்சாலை, பம்பல், சென்னை-75.
ஆசிரியரின் அனுமதி பெற்று இலவசமாக
வெளியிடலாம்.

உ

ஜெய துர்க்கா.

உ த ய தீ ப ம்.

மங்களங்கள் நிறைந்த பொழுது இப்பொழுது மலர்ந்து கொண்டு இருக்கிறது

இருட்டிலே இருந்த வாழ்க்கை, வெளிச்சத்தின் ஒளியை நோக்கி விரைந்து வேகமாக நடந்து கொண்டிருக்கிறது.

உங்களில் யாராவது இப்போழுது தூங்கிக் கொண்டு இருக்கிறீர்களா?

தூக்கம்தான் ஒரு மனிதனுடைய வாழ்க்கையைத் தடைப்படுத்தி நிறுத்தக் கூடியது.

யார் விழித்துக் கொள்கிறார்களோ, அவர்கள் தங்களுடைய இரண்டு கண்களினாலும் எல்லாவற்றையும் பார்க்கிறார்கள்.

யார் எல்லாவற்றையும் பார்க்கிறார்களோ, அவர்கள்தான் நிறைந்த புத்திமான்களாகவும், அவர்கள்தான் நிறைந்த கீர்த்திமான்களாகவும் அவர்கள்தான் நிறைந்த தனவான்களாகவும் இருக்கிறார்கள் வாழ்கிறார்கள்.

ஒருசிலர் தனக்குவராத துக்கங்களையும், தன்னைச் சேராத துக்கங்களையும், தன்னுடையது என்று

நினைத்துக்கொண்டு இழுத்துப் போர்த்திக் கொண்டுப் படுத்திருப்பார்கள்

நீங்கள் உங்களுடைய போர்வைகளை தூர எறிந்து விடுங்கள்.

அவைகள் உங்களுடைய கர்மாக்களை உங்களிடத்திலே இருந்து விரட்டி விட்டதை போல

கர்மத்திலிருந்து விடுபட்டவர்கள் எல்லாவிதமான கர்மியங்களையும் அடைகின்றார்கள்,

இறைவன் உங்களுக்கு அருகிலே இருக்கிறான்.

நிங்கள் நேற்று இரவு தூக்கத்திலே சொப்பனத்திலே இறைவனைப் பார்த்திருக்கலாம்.

சொப்பனத்திலே சாப்பிட்டால் வயிறு நிரம்பாது.

சொப்பனத்திலே நகைகளை அணிந்துகொண்டால் விழித்துப் பார்த்ததும் கழுத்திலே அவைகள் இருக்காது.

சொப்பனத்திலே ஒருவன் கடலிலே நீராடினுன் என்று சொன்னுலும் கூட, அவன் ஆடைகள் நனைந்து இருக்காது.

ஏனென்றால், அவைகள் உண்மைகள் அல்ல; மாயங்கள்!!

மாயங்கள் என்பவைகள் நடந்தவைகளைப் போல காட்டுவித்து ஒருவகையான பிரமையிலே மனிதனை வைப்பது.

பிரமை. பிரமிப்பது இந்த இரண்டுமே மனிதன் நல்ல வழியிலே நடப்பதற்கு தடைக்சுற்களாக இருக்கின்றன.

எதைக்கண்டும் பிரமிக்காத தன்மைதான் அஞ்சாத தன்மையென்று சித்தர்கள் சொல்லுவார்கள்.

1. மனிதனுக்கு அச்சந்தருவது எது?

2. பயப்படுவேது எது? 3 பயமுருத்துவது எது? என்று சற்று அவரவர்களே தனியாக இருந்து சிந்தித்து பார்த்தால், பயப்படுவேதற்கும் துக்கப்படுவேதற்கும் உரிய பொருள்கள் எவையும் நம்முடைய அருகிலே இல்லை என்பது நன்ருகத் தெரியும்.

ஆனால், நாமே இருட்டிலே இது பாம்பு என்று பயந்து கொண்டு இருக்கிறோம்.

வெளிச்சம் வந்தபிறகு, அது வெறும் தாம்புக் கயிறுதான் என்று தெரிந்த பிறகு, அந்த பயஉணர்வு போய்விடுகிறது.

இதைப்போலவே, நம்மைச் சுற்றியிருக்கக் கூடிய மறைப்புகள் (அறியாமை) நம்முடைய முன்னேற்றங்களைத் தடைசெய்து கொண்டு இருக்கின்றன.

என் அன்புக் குழந்தைகளே!

நீங்கள் பயத்துக்கு அப்பாற்பட்டவர்கள்; துக்கத்-

திற்கு அப்பாற்பட்டவர்கள்; சோதனைகளுக்கு அப்பாற்பட்டவர்கள்.

நீங்கள் சந்தோஷப்படுவதற்கே பிறந்திருக்கிறீர்கள்.

நீங்களாக எந்த துக்கத்தையும் விலை கொடுத்து வாங்கி சேர்த்து வைத்து விடாதீர்கள்.

எல்லாவற்றையும் துச்சமென்று நினையுங்கள்.

இறைவன் தன்னுடைய சக்தியோடு நம்முடைய வீட்டின் நடுக்கூடத்திலே இருக்கிறான். இதை நீங்கள் நன்றாகப் புரிந்துக்கொள்ளுங்கள்

எரிகின்ற விளக்கிலே, தெரிகின்ற சுடர் இருக்-

கின்றதே. அது தெய்வத்தினுடைய திருவருட்பிரகாசம்.

நீங்கள் எதையோ தேடி தேடித் அலைந்து கொண்டே இருக்கிறீர்கள்.

ஏன் தேடுகிறீர்கள் என்று உங்களுக்கும் தெரியவில்லை.

நாம் தேடக்கூடிய பொருள் நமக்கு உரியதுதானா இது நமக்கு தேவையா என்றும்கூட நீங்கள் இதுவரை யோசிக்கவில்லை.

ஒரு பொருளைத் தேடுகிறோம் என்று சொன்னால் அந்த பொருள் நமக்குத் தேவையானவாக இருக்க வேண்டும்.

வெயிற்காலங்களிலே நீங்கள் விசிறியைத் தேடினீர்கள் என்றால் அது அப்பொழுது தேவைப் பட்டது.

குளிர்காலங்காலங்களிலே நீங்கள் வெப்பமான நீரை விரும்பினீர்கள் என்றால் அது அப்போழுது தேவைப்பட்டது.

காலங்கள் வேறுபடுவதைப் போல, தேவைகளும் வேறுபட்டே போகின்றன.

தேவைகள் வேறுபடுவது போலவே, மனிதனுடைய ஆசைகளும் பாசங்களும் துக்கங்களும் கூட வேறு பட்டுக்கொண்டு இருக்கின்றன.

ஒரு மனிதனைச் சார்ந்திருக்கக் கூடிய துக்கம் மற்றொரு மனிதனுக்குச் சந்தோஷமாக இருக்கும். ஒரு மனிதன் காலிலே அடிபட்டுக்கொண்டிருக்கிறான் என்று சொன்னால். அது அவனுக்குத் துக்கமாக இருக்கிறது. ஆனால் அதே துக்கம்-இவன் காலிலே இருக்க கூடிய வலி-அடுத்தவனுக்குத் தெரியுமா என்று கேட்டால், அவனால் இந்த வலியை-இப்படி துக்கப்படுவான் என்று நினைத்துப்பார்க்க முடியுமே தவிர அந்த துக்கத்தை அப்படியே அவனால் ஏற்றுக் கொள்ள முடியாது.

இப்படி இந்த துக்கத்தையும் ஏற்றுக்கொள்ள

கூடிய பொருள் ஏதாவது இருக்கிறதா என்றுயோசித்து பாருங்கள்;

உங்களுக்கு நன்ருகத் தெரியும். அதுதான் தெய்வத்திருவருள்.

திருவருள் ஒன்றுதான் உங்களுடைய துக்கத்தையும் உங்களிடத்திலேயிருந்து வாங்கிக் கொண்டு உங்களுக்கு நல்ல நிறைந்த மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது

அந்த தெய்வத்தை விட்டு மனிதன் விலகிபோகின்ற பொழுது துக்கத்தை அவனுல் இறக்கி வைக்க முடியவில்லை.

ஒருசுமை, அதன்மீது மறுசுமை, மேலும் சுமைகள்

என்று மனிதன் கழுதையைப் போல சுமந்து கொண்டே போகின்றான்

கழுதையாவது ஒருதுறைக்கு வந்தபிறகு அதன் மீது இருக்கக்கூடிய மூட்டைகள் இறக்கிவைக்கப்படும்.

ஆனால் மனிதனுடைய மூட்டைகள் மொத்தமாக இறக்கி வைக்கப்படுவதில்லை.

இதனால்தான் கர்மங்களை, பிராரப்தம், சஞ்சிதம், ஆகாம்மியம் என்று மூன்று மூட்டைகளாகச் சொல்லு வார்கள்.

இந்த மூன்று மூட்டைகளையும் நீங்கள் இறக்கி வைக்காமல், எரித்து விடுவது எப்படி என்பதைப்பற்றி சிந்தித்துப் பாருங்கள்.

நீங்கள் உண்மையான மகிழ்ச்சியை அடைய வேண்டும் என்று சொன்னால், இந்த துக்க முடிச்சுகள் மற்றவர்கள் மீது சுமத்தப்படாமல் இருக்கவேண்டுமெ-ன்று சொன்னால், இந்த முடிச்சுகளை நீங்கள் எரித்து விட வேண்டும்.

அப்படி எரித்து, துக்ககமே இல்லாமல் செய்யக் கூடிய சக்திக்குத்தான் "**துர்க்கா**" என்று சொல்லுவார் -கள் துக்கத்திலிருந்து யார் துக்கப்படுகின்றவர்களை விடுவிக்கின்றாரோ, அந்தவிடுவிக்கின்றசக்திக்குத்தான் '**துர்க்கை**' என்று பெயர்

துக்கமிலாப் பெருவாழ்வு துர்க்கையினால் கிடைக்கக் கூடியது சாந்தமும் சமாதானமும் மனிதனு

க்கு அவனுடைய இதயத்திலே நிறைந்திருக்க வேண்டியது அந்த சாந்தத்தையும் சமாதானத்தையும் மனிதனுடைய இதயத்திலே நிறைத்து வைக்கின்ற சக்திதுர்க்கா தேவியினிடம் தான் இருக்கின்றது இந்த உண்மையை நீங்கள் நன்ருகப்புரிந்து கொள்ளுங்கள நீங்கள் இப்பொழுது எழுந்து விட்டிர்கள்! ஆம்! உறக்கத்திலேயிருந்து விழித்துக் கொண்டு விட்டீர்கள்!

நீங்கள் துக்கமில்லாதவர்கள் !

உங்களைச் சுற்றி தெய்வத்தினுடைய திருவருள். பிரகாசமாக ஒளி விட்டுக்கொண்டிருக்கிறது
நீங்கள் மற்றவர்களுக்குக்கூட ஒளி காட்டப்போகிறீர்

கள் உங்களுடைய வாழ்க்கை, மற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டக் கூடிய வாழ்க்கையாக அமையும்.
நீங்கள் உங்களுடைய முகங்களை நன்ருகத்துடைத்து கொள்ளுங்கள் கால்கைகளை நன்ருகக்கழுவிக் கொள்ளுங்கள் உள்ளத்தையும் (நி) தானமாக்கி கொள்ளுங்கள்! ஏனென்ருல், ஏற்கனவே உங்களை சேர்ந்த அழுக்குகள் விட்டுப் போகட்டும்; இதற்காகத்தான் அழுக்குகளிலிருந்து நீங்கள் விடுபட்டபிறகு, அழுக்கே இல்லாத ஒரு நல்ல வாழ்க்கை உங்களுக்கு அமைந்து விடும் விழிப்படைந்தவர்களே!
உங்களுடைய நாவுகளிலேயிருந்து இறைவனுடைய திருநாமங்களைச் சொல்லுங்கள்.

ஒவ்வொரு நாளும் எழுந்த பிறகு ஒரு மணி அள வாவது பேசாமலிருந்து பாருங்கள் என் தெரியுமா ?

உங்களுடைய இதயமும் பேசி வாயும் பேசி கண் களும் பேசி உடலும் பேசிக் கொண்டிருந்தால். அது பேச்சுச்சந்தைக்(கடையாக'இருக்கும் இந்தப் பேச்சுகளி லிருந்து யார் விடுபடுகிறார்களோ. அவர்கள் தக்ஷிணா மூர்த்தியின் சன்னதியிலே பேசாமல் சனகாதி முனிவர் இருந்தார்களே. அவர்களைப்போல ஓர் உயர்ந்த உண்மைகளைப் புரிந்து கொண்டவர்களாக இருப்பார்கள். தேவையில்லாமல் பேசுவதை நிறுத்துங்கள் தேவையி ல்லாமல் சிந்திப்பதை ஒழியுங்கள். தேவையில்லாமல் ஓடுவதை நிறுத்துங்கள் உங்களிடத்திலே தேவையில்

லாதவை களெல்லாம் தங்காமல் போய்விடும் அகன்று விடும் அப்பொழுது. உங்களிடத்துக்கு உங்களுடைய நல்வாழ்வுக்கு எது தேவைப்படுமோ அது நிரந்தரமாக இருக்கும். ஓர் பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பி வைத்திருந்தோம் என்று சொன்னால், அந்த பாத்திரத்துக்குள் வேறு ஒரு பொருளைப் போட முடியாது அநத பாத்திரத்துக்குள் இருக்கக் கூடிய தண்ணீரை நீங்கள் கொட்டி விட்டால், அந்த பாத்திரத்தில் வேறு பொருளை நீங்கள் போடமுடியும்.அதைப்போல இவ்வளவு நாளும் நீங்கள் எதை எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தீர்களே

அவைகள்யெல்லாம் கீழே கொட்டிவிடுங்கள் அகற்றி விடுங்கள் அவைகள் எல்லாம் உங்களுக்குத் தேவை இல்லாதவைகள் உங்களுக்கு நன்மை தராதவைகள் விளையாதவித்துக்கள்
இந்த விளையாத வித்துக்களை வைத்துக்கொண்டு நீங்கள் விவசாயத்திற்குக் கிளம்பினீர்கள் என்று சொன்னால் உங்களுடைய முயற்சிகளும் உங்களுடைய எண்ணங்களும் எல்லாமே வீணாகப்போய்விடும்
நீங்கள் இப்பொழுது எழுந்து விட்டீர்கள்!

உறக்கம் உங்களை விட்டுப் போய் விட்டது !

எனவே, நீங்கள் தான் இந்த உலகத்திலே நன்ருக விழி துக்கொண்டவர்கள்இந்த உலகத்தைச் சுற்றும் முற்று -ம் நன்ருகப் பாருங்கள். எத்தனை பேர் உண்மை தெரியாமல் மாய மயக்கத்தில் போர்த்திக் கொண்டு கிடக்கிருர்கள்? இது வியப்பாக இல்லையா? உங்களுக் கே இவர்களைப் பார்க்கும் பொழுது வேதனையாக இல் லையா ஆம்! அவர்களையும் எழுப்ப முயற்சி செய்யு ங்கள்! அப்பொழுது உங்களுடைய வாழ்க்கையானது, தெய்வத்திருவருள் நிறைந்த வாழ்க்கையாக மாறிவிடும் நாம் விழித்ததோடு மற்றவர்களையும் விழிப்படையச் செய்யக் கூடிய வாழ்க்கை தான் நல்ல வாழ்க்கை

அன்பர்களே !

என் அன்புக்குழந்தைகளே !

உங்களிடத்திலே இப்பொழுது தெய்வம் குடி கொள்ள இதோ வந்துவிட்டது!
உங்களுடைய இதயக்கதவுகள் நன்றாகத் திறவுங்கள்! அங்கே நல்ல வாசனைப் பொருள்களை ஏற்றிவையுங்கள்! தெய்வத்தை அங்கே குடியமர்த்துங்கள் !

நல்லவைகள் நடக்கும் !!

ஓம் ஜெய துர்க்கா !!

With best compliments from :

Phone : 551958

J. R. K. Rice Mill

Fighter **Brand**

PONNI RAW RICE

20 kg. - 75 kg.

ELLYA MUDALI STREET, MADRAS-600 081

